RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

DOI: 10.34256/irjt22s849

# தமிழர் தத்துவத்தில் ஆசீவகக் கோட்பாடுகள்

சு. சுமதி [அ, *]

[அ] தமிழ்த்துறை, தருமபுரம் ஞானாம்பிகை அரசினர் மகளிர் கலைக் கல்லூரி, மயிலாடுதுறை-609001, தமிழ்நாடு, இந்தியா

# Theories of Aseevagam in Tamil Philosophy

**S. Sumathi [a, *]**

[a] Department of Tamil, Dharmapuram Gnanambigai Government Arts College for Women, Mayiladuthurai-609001, Tamil Nadu, India

* Corresponding Author:
sumathimukilan@gmail.com

Received: 05-05-2021
Revised: 02-06-2022
Accepted: 08-06-2022
Published: 09-08-2022

Check for updates

**ABSTRACT**

Naturally occurring minerals are grouped into five types of geological formations. Other substances that may be present in Fivefold are called constituents. The concepts of God and soul based on Vedic and Upanishad principles are not found anywhere in Tolkappiyam or Sangam literature. Nature is the unadulterated first philosophical position of the Tamils in their life. It can be seen that the attempt to search for causes and factors in the dynamic nature of nature has paved the way for the emergence of philosophy and theoretical concepts. In this way, priming the object and priming the concept is taking place through time. Although Jainism, Buddhism, and Vedicism can be found in the Tamil philosophical tradition, this article has explored the auspicious thoughts that had already strengthened.

**Keywords:** Tamil Philosophy, Vedic, Sangam literature, Tolkappiyam

## முன்னுரை

இயற்கையில் இருக்கக்கூடிய பூதப்பொருட்கள் ஐவகை நிலவியல் தன்மைகளில் முதற்பொருட்களாக வைக்கப்படுகின்றன. ஐந்திணைகளில் இருக்கக் கூடிய பிறபொருட்கள் கருப்பொருட்கள் என அழைக்கப்படுகின்றன. தொல்காப்பியத்திலோ, சங்க இலக்கியத்திலோ கடவுள், ஆன்மா என்ற கருத்தாடல்கள் வேத, உபநிடத கொள்கைகள் அடிப்படையில் எங்கும் காணப்படவில்லை. திணை வாழ்வில் இயற்கையே தமிழரின் கலப்பற்ற முதல் தத்துவ நிலை எனலாம். இயற்கையில் இயக்கவியல் தன்மையில் காரண, காரணிகளைத் தேடும் முயற்சியே தத்துவத் தோற்றத்திற்கும், கோட்பாட்டுக் கருத்தியலுக்கும் வழி வகுத்துள்ளதை அறிய முடிகின்றது. இந்த வகையில் பொருளை முதன்மைப்படுத்துதலும், கருத்தை முதன்மைப்படுத்துதலும் வழிவழியாக நடைபெற்றுக் கொண்டுதான் இருக்கின்றது. தமிழர் தத்துவ மரபில் சமணம், பௌத்தம், வைதிகம் காணப்பட்டாலும் ஏற்கனவே வலுபெற்றிருந்த ஆசீவகச் சிந்தனைகளை இனம் காண்பதே நம் முயற்சியாகும்.

சங்க இலக்கியங்களில் இடம்பெறும் பாடல்களின் தொகுப்பு சங்ககாலம். அதற்கு முன்பிருந்த கால புலவர்களின் பாடல் தொகுப்பு என்றே எண்ண வேண்டும். ஐவகை நிலவியலில் பலதரப்பட்ட மக்களின் பண்பாடுகள், பழக்கவழக்கங்கள் ஒரு நிலத்திலிருந்து மற்றொரு நிலத்திற்குள் புகும் என்பதில் ஐயமில்லை, என்றபோதும் மதிப்புறு விழுமியங்களே போற்றப்படுகின்றன. மக்கள் கலப்பால் நிலவியல்

பண்புகளும் பழக்கவழக்கங்களும் ஒன்றையொன்று ஏற்றுக்கொண்டு ஒத்த இனத்தின் பண்பாடாக நிலைபெறும்.

புலப்பெயர்ச்சி என்பது நாடுகள் தாண்டியும், நாடுகளுக்குள்ளும் நடந்துள்ளன. நாடுகளுக்குள் நடைபெறும் போதும் எவ்வித பண்பாட்டுச் சிதைவும் தோன்றுவதில்லை மாறாக எல்லைகள் தாண்டும்போது அவை மாற்றங் கொள்கின்றன. "70,000 ஆண்டுகளுக்கு முன் ஆப்பிரிக்காவிலிருந்து வெளியே மேற்கொள்ளப்பட்ட வெற்றிகரமான மனித இடபெ

யர்ச்சி இக்காலக் கட்டத்தில் தான் நிகழ்ந்ததாக மரபியலாளர்கள் கண்டறிகின்றனர்" என்கின்றார் அறிஞர். தங்களை ஆரியர் என அழைத்துக் கொண்டவர்கள் இந்தியாவுக்குள் புலம் பெயர்ந்து வந்தது போன்று இங்கிருந்தவர்களும் அயலகம் புலம் பெயர்ந்துள்ளனர். ஆரியர்களின் வருகைக்கு முன்னர் வலுவான இனமாக தமிழ் இனம் இருந்துள்ளது. இங்கு சமணம், பௌத்தம், வைதிகம் இருந்ததுபோல் ஆசீவகம் என்ற சமயமும் இருந்துள்ளது. வைதீகர்களின் உயிர்ப்பலியினை எதிர்க்கும் சமயங்களான சமண, பௌத்த கோட்பாடுகளைப் போன்று ஆசீவகமும் எதிர்ப்புக் கோட்பாட்டை நிலை நிறுத்தியிருந்தபோதும் ஊழ் கோட்பாட்டில் மேலிரு சமயங்களிலிருந்து விலகியே நின்றது.

## ஆசீவகர்களும் ஆசீவகமும்

தமிழ் இலக்கியத்தில் ஆசீவகம் பற்றிய முதல் செய்தியானது சிலப்பதிகாரத்தில் தான் காண முடிகின்றது. கோவலன் இறந்த பிறகு கண்ணகி தந்தை மாநாய்கன் தன் உடைமைகளை ஆசீவகம் பள்ளியினர்க்கு ஈந்தான் என்ற குறிப்பை அறிஞர் எடுத்துரைக்கின்றார் (Basham, 2009). அதன்பின் மணிமேகலையில் சமய கணக்கர் தந்திறங்கேட்ட காதையில், ஆசீவகவாதத்தில் காணப்படுகின்றது. மேலும் நீலகேசியில் ஆசீவக வாதச் சருக்கத்திலும், அருள் நந்திசிவாச்சாரியாரின் சிவஞானசித்தியாரிலும் ஆசீவகம் பற்றி அறிய முடிகின்றது.

கி.மு.6ஆம் நூற்றாண்டில் செல்வாக்குடன் திகழ்ந்த சமண, பௌத்த சமயங்கள் போன்று ஆசீவகமும் செல்வாக்குப் பெற்றிருந்தது. மற்கலி கோசாலரின் நியதிக் கொள்கையும் பூரண காசிபரின் அகரியவாதமும், பகுதகச்சாளரின் அணுக்கொள்கையும் இணைந்த ஒரு சமயமே ஆசீவகமாகும். சமண - மகாவீரருக்கும், பௌத்த - புத்தர்க்கும் மூத்தவரான மற்கலி கோசாலர் இருந்துள்ளார். இவர் எழுதிய நூல் - நவகதிர் என்பதாகும். "இம்மற்கலி கோசலர் கோசலரென்றும் கூறப்படுவர். இவர் ஆசீவகருள் மூன்றாம் தீர்த்தங்கரென்றும், அசோக மன்னனுடைய பேரனான தசரதனென்பான் இந்நெறியிற் பேரீடுபாடுடையானென்றும் கூறுவர். ஆசீவக நெறியைக் கண்ட ஆசிரியன் எளியகுடியில் ஆக்களைக்கட்டும் தொழுவத்தில் (கோசலையில்) பிறந்தது பற்றி, அவர் நின்ற தலைவர்கள் கோசலர் எனப்பட்டனர்." என்று உரையாசிரியர்கள் கூறுகின்றனர் (Venkatasamy Nattar, 2018). மேலும் தொல்காப்பியம் எழுத்ததிகாரத்திற்கு உரை செய்த இளம்பூரணர், உயர்திணைப்பெயர்கள், வேற்றுமை, அல்வழியில் வரும் பொது இயல்பாக வரும் எனக் கூறுகின்றார். அதற்கு எடுத்துக்காட்டு கூறும் பொழுது, ஆசீவகப்பள்ளி எனக் குறிப்பிடுவதையும் காணமுடிகின்றது (Ilampuranar, 2005). இவையன்றி வடமொழியில் உள்ள உத்திராத்யான, பகவதி சூத்திரம், பாலி பிடாக நூல்கள், பாகதம் போன்றவற்றிலும் ஆசீவகம் பற்றிய செய்திகள் காணப்படுகின்றன.

மேலும் சிம்மவர்மனின் கி.பி.446 ஆண்டு நெல்லூர் விளாவட்டி கல்வெட்டுகள் தரும் சான்றுகளில் இரும்பு, தோல், ஆடை, கயிறு இவற்றில் ஆசீவகர்கள் பயன்படுத்தும் பொருட்கள் வரிவிலக்குப் பெற்றதையும் அறிய முடிகின்றது (Basham, 2009).

## ஆசீவகம் பொருள் விளக்கம்

வடமொழியில் AJIVIKA என்று அழைக்கப்படும் இவர்கள் தமிழில் ஆசீவகர் என அழைக்கப்பட்டனர். உறுதி, மறுப்பு, தற்செயல் என்கின்ற மூன்றையும் அடிப்படையாகக் கொண்டவர்கள். ஆசு - தூய்மையான, ஈவு - விடை பகரும் நிலை, அகம் - உள்ளம் என்பதாகும். தூய்மையான விடை

தரும் உள்ளத்தை (இடத்தை)க் கொண்டவர்கள் என்பது பொருளாகும். ஆசீவக நெறியாளர்கள் கற்படுக்கைகளில் தங்கி விவசாயம், கணிதம், வானியல் போன்ற வினாக்களுக்கு விடையளித்தனர். இவர்களுக்குத் தேவையான இடங்களை மாதங்கர் (ஆண்) மாதங்கி (பெண்) ஆகியோர் தெரிவு செய்து தந்தனர். கற்படுக்கைகளில் இருந்து கொண்டு ஈவு கொடுத்தமையால் ஈவு அகம் என பெயர் பெறலாயிற்று.

## ஆசீவகக் கோட்பாடுகள்

இயற்கை பொருளை மையமிட்டு இயற்கையின் இயக்கம் இறைவனால் நடைபெறுவதாக மதவாதிகளும் அறிவியலால் நடைபெறுகிறது என பொருள் முதல் வாதிகளும் தத்தம் கருத்தை எடுத்துரைக்கின்றனர். இயற்கையின் இயக்கம் ஒரு தற்செயல் என்கிறது ஆசீவகம். 'தற்செயல் நிகழ்வு கோட்பாட்டின்படி, எல்லாமே தாமாக, சற்றும் எதிர்பாராமல் நிகழ்வதால் உலகின் ஆதாரத்தை இயற்கையிலோ அல்லது அதற்கு வெளியிலோ தேடுவது வீண் வேலை என்கிறார் (Samy, 2013).

## அணுக்கொள்கை

இந்த உலகம் அணுத்திரள்களானது அனைத்துப் பொருட்களும் அணுக்களின் செறிவால் நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம் என புலப்படத் தோன்றுகிறது (அட்டவணை 1-யை பார்க்க). இந்த உலகப் பொருட்கள் உலகை விட்டு நீங்கவும் செய்யாது, அதனைக் காணும் போது வேறுபாடும் தோன்றாது என்கிறார் தொல்காப்பியர்,

"நிலம் தீ நீர்வளி விசும்போ டைந்துங்

கலந்த மயக்கம் உலகம்"

மேற்கண்ட ஐம்பூதங்களும் ஒரு தன்மையுடையவை அல்ல, ஆனால் அவை வேறுபட்டு ஒன்றை ஒன்று சார்ந்தே இயங்குகின்றன (Ilampuranar, 2005).

"மண்திணிந்த நிலனும்

நிலன் ஏந்திய விசும்பும்

விசும்புதை வருவளியும்

வளித்தலை இயதீயும்

தீமுரணிய நீரும், என்றாங்கு

ஐம்பெரும் பூதத்து இயற்கை போல"

இந்த அணுக்களொடு இன்பம், துன்பம் இரண்டையும் இணைத்து ஏழு என்கிறது மணிமேகலை அணுக்களின் இயல்பான குணங்களைக் காணும் போது, கீழ்க்கண்ட அட்டவணை வகையில் அறிய முடியும் (Venkatasamy Nattar, 2018).

## அணுக்களின் இயல்பு

"நீரும் நிலமும் பணிந்த சீர்வகைப்படும், மேற்சீரில் தீயும், உயிறும், காற்றும் அடங்கும்" என்கிறது (Venkatasamy Nattar, 2018). தீயின் வெம்மைக்கும் நீரின் குறுமைக்கும் தற்செயல்வாதமே இயல்பாகின்றது என ஆசீவகம் நம்புகிறது. அனைத்துப் பொருட்களின் தோற்றத்திற்கு இயற்கை காரணமாகின்றது. மண்பானையாகிறது, துணியாவதில்லை. துணியும் பானையாவதில்லை. ஓர் அணு மற்றொன்றொடு இயைந்து நின்றாலும் முழுமையுமாக கலவாது தனித்தே நிற்கின்றது என்கிறது ஆசீவகம்.

அட்டவணை 1. **அணுக்கொள்கை**

| அணுப்பெயர் | குணம் | இயல்பு |
|---|---|---|
| நிலம்<br>நீர்<br>காற்று<br>தீ<br>உயிர் | வற்பம்/வன்மை<br>குளிர் /சுவை<br>அசைதல் / இறைதல்<br>எரிதல் / சுடுதல்<br>அறிதல் / அறிவித்தல் | பணிந்த / கிடக்கை<br>கீழ்<br>குறுக்குநெடுக்காய்<br>மேல்<br>அகம் / உளம் |

## அபிசாதி / நிறக்கோட்பாடு

மனிதர்கள் ஒவ்வொரு படிநிலைகளைக் கடந்து வீடுபேறு அடையும் நிறவியல் கோட்பாடே அபிசாதி கோட்பாடாகும். அடிப்படை நிறங்களான கரும்பிறப்பு, கரும் நீலப்பிறப்பு, பசும் பிறப்பு, செம்பிறப்பு, மஞ்சள் பிறப்பு, வெண்பிறப்பு என்கின்ற ஆறும் மூன்று உட்பிரிவுகளுடன் பதினெட்டு படிகளைக் கடந்தாக வேண்டும். இறுதியில் நல்வள்ளை எனும் 'நிறமிலி' நிலையினை அடைதலே வீடுபேறாகும். இதனை மணிமேகலை,

"கருமம் பிறப்பும் கருநீலப் பிறப்பும்

பசும்ம் பிறப்பும் செம்பிறப்பும்

பொன்ன் பிறப்பும் வெண் பிறப்பும்

என்றிவ் வாறு பிறப்பினுமேவிப்

பண்புறு வாசையிற் பாற்பட்டுப் பிறந்தேன்

கழிவெண் பிறப்பிற் கலந்து வீடணைகுவர்" என்கிறது (அட்டவணை 2-யை பார்க்க) (Venkatasamy Nattar, 2018).

அட்டவணை 2. அபிசாதி நிறப்படிநிலைகள்

| வ. எண் | அடிப்படை நிறம் | படிநிறை நிறம் | படி |
|---|---|---|---|
| 1 | கரும்பிறப்பு | அடர்கருமை கருமை<br>சாம்பல் | 18 ஆம் படி<br>19 ஆம் படி<br>16 ஆம் படி |
| 2 | நீலப் பிறப்பு | கருநீலம்<br>நீலம்<br>வான்நீலம் | 15 ஆம் படி<br>14 ஆம் படி<br>13 ஆம் படி |
| 3 | பசும் பிறப்பு | அடர் பச்சை பச்சை வெளிர்பச்சை | 12 ஆம் படி<br>11 ஆம் படி<br>10 ஆம் படி |
| 4. | செம்பிறப்பு | செம்மை இளஞ்சிவப்பு<br>குவி | 09 ஆம் படி<br>08 ஆம் படி<br>07 ஆம் படி |
| 5. | மஞ்சள் பிறப்பு | அடர்மஞ்சள் இளம் மஞ்சள் பொன்மை | 06 ஆம் படி<br>05 ஆம் படி<br>04 ஆம் படி |
| 6. | வெண் பிறப்பு | வெண்மை வெண்மை வெண்மை | 03 ஆம் படி<br>02 ஆம் படி<br>01 ஆம் படி |

ஆசீவகக் கோட்பாட்டில் யானை (அண்ணல்) தலைமையிடம் பெறுகின்றது. யானை பிறக்கும் போது கருமை நிறத்துடன் பிறந்து வளரவளர நிறம் மாறுபாடு கொள்வதால், படிநிலைகளுக்கு சிறந்த காட்டாக ஆசீவர்கள் எடுத்துரைக்கின்றனர்.

## நியதிக் கொள்கை

நியதிக் கொள்கையினை நீலகேசி எடுத்துரைக்கின்றது. இதனைச் சதுவாநியதம் என்றும் கூறுவர். இந்த உலகம் ஓர் ஒழுங்கின் அமைவில் கட்டப்பட்டதாகும். இந்தக் கட்டுதல் இயற்கையாக நிகழ்ந்த தற்செயலாகும். இதில் கடவுள் என்ற கருத்தாவிற்கு இடமில்லை என்கிறது. சதுவாநியதம் பற்றி கூறும் நீலகேசி,

“அதுவா வதுவு மதுவாம் வகையு

மதுவாந் துளையு மதுவாம் பொழுதுந்

சதுவா நியதத்தனவா வுரைத்தல்

செதுவா குதலுங் சிலசொல் லுவன்யான்”

எனக் குறிப்பிடுகின்றது (Venkatasamy Nattar, 2018).

### ஆவது ஆகும் நியதிக்கொள்கை

எப்பொருள் எவ்வகையில் ஆக்கம் பெறுமோ அப்பொருள் அவ்வகையில் ஆக்கம் பெறும் என்பது ஆவது ஆகும் என்னும் நியதியாகும். அரிவைப் பருவத்துப்பெண், வளர்க்கப்படும்போது பெறர்கரிய மூன்று முழம் வளர்ச்சி பெறுவாள். அவள் வளரும் வயதும் (காலம்) ‘ஆம்’ என்னும் முறைகளுக்கு ஏற்ப கட்டாயம் ‘ஆவது ஆகும்’ என்கின்ற நியதியைக் கூறுகின்றது. இங்கு ஆவது என்பது உடல் வளர்ச்சியையும் அகவையையும் (காலம்) கூறுவதாகும்.

### ஆம் ஆங்கு ஆம் நியதிக்கொள்கை

ஆகும் முறைப்படி ஆகும் என்பதே இந்நியதியாகும். பெண் குழந்தையினை உரிய உணவுப் பொருட்கள் கொடுத்து வளர்த்தால் ‘உரிய வகையில் உவந்தாங்கு எடுத்தல்’ ஆகும் முறைப்படி வளர்வது உறுதி என்கிறது.

### ஆந்துணையாம் நியதிக் கொள்கை

‘அரிய முழம் மூன்று அளவாம்’ பெண் குழந்தை வளர்ச்சி எந்த அளவிற்கு அமைய வேண்டுமோ அந்த வகையில் அமைவது இந்த நியதியாகும். குளத்தில் உள்ள நீரின் அளவே ஆம்பலும் அமைவது போல், நீரின் உயர்வாய் வளருவதும், குறைவால் குறைந்து காணப்படுவதும் இயல்பு என்கிறது.

### ஆம்பொழுது ஆம் நியதிக்கொள்கை

எவ்வளவு முயன்றாலும் உள்ளதைப் போக்கவோ, சிலவற்றை ஆக்கவோ இயலாது. அனைத்தும் நியதி படியே நடக்கின்றன. “ஆசீவர்களின் கொள்கைப்படி எல்லா நிகழ்ச்சிகளும் நியதிக்குக் கட்டுப்பட்டவை. ஆதலின் எதிர்காலத்தில் நடைபெறவிருக்கும் நிகழ்வுகளும் முன்கூட்டியே தீர்மானிக்கப்பட்டவையாகும் என்கிறார்”. ஆகின்ற பொழுது எல்லாம் நடக்கும் என்பது இவ்விதியாகும் (Kandasamy, 2012).

## ஊழ் மற்றும் கடவுள் கோட்பாடு

ஆசீவர்கள் ஊழ் பற்றிய எண்ணம் கொண்டவர்கள். ஊழ் விதிப்படி உயிர்கருவில் தோன்றும் போதே நியமிக்கப்படுகின்றது. சமணம், பௌத்தம், வைதிகம் கொண்டுள்ள வினை (கர்மா) கோட்பாட்டிலிருந்து ஆசீவகம் முற்றிலும் வேறுபடுகின்றது. சிலம்பில் குறிப்பிடப்படும் 'ஊழ்வினை உருத்துவந்தூட்டும் என்பதூம்' என்பதில் உள்ள ஊழ் முற்பிறவியில் செய்த வினை தொடர்ந்து வந்து இப்பிறவியிலும் வரும் எனக் கூறுகின்றது. மணிமேகலை 'முன்னுள வூழே பின்னமுறு விப்பது' என்று கூறி அனுபவிக்கும் வினையில் வருவதில்லை, ஏற்கனவே உள்ளது என்கிறது. திருக்குறள் ஊழ் பற்றி கூறும்பொழுது ஆகூழ் - ஒருவனுக்கு ஆக்கத்தைத் தருவது: போகூழ் - ஒருவனை விட்டு அகல்வது: இழவூழ் - ஒருவனுக்கு அழிவைத் தருவது எனக் கூறி ஊழ் நல்லன, தீயனவற்றிற்குக் காரணம் என்கிறது.

கடவுள் குறித்து எந்த ஒரு கடவுளையும் முன்னிறுத்தாத ஆசீவகம் தெய்வத்தன்மை பெற்றவரை மட்டும் எடுத்துரைக்கின்றது. நீலகேசியில் ஆசீவகக் கோட்பாடுகளை 'ஒக்கலி', 'ஓகலி' என்ற இருவர் எடுத்துரைக்கின்றனர். இவர்கள் தெய்வத்தன்மையுடன் போற்றப்பட்டாலும் மனிதன் உய்விற்கு எந்தத் தெய்வமும் உதவுவதில்லை என எடுத்துரைக்கின்றனர். ஆசீவகத்தில் மண்டல நெறிபட்டவர் மீண்டும் பிறப்பார் என்றும் செம்போதக நெறிபட்டவர் மீண்டும் பிறப்பதில்லை என்றும் நம்பும் வழக்கம் உள்ளது.

## முடிவுரை

ஆசீவகக் கோட்பாடுகள் வடமொழி சமயம் சார்ந்த உபதேச நூல்களில் காணப்படுவதுபோல், தமிழ் இலக்கியங்களிலும் காணமுடிகின்றது. தமிழில் உள்ள நீலகேசி என்னும் நூல் ஆசீவகக் கோட்பாட்டினை விளக்கும் முழுமையான நூலாகக் கருத முடிகிறது. ஆசீவர்களின் ஊழ் பற்றிய நியதிக் கோட்பாடும் இயற்கையை மையமிட்ட தற்செயல் கோட்பாடும் முழுக்க முழுக்க பொருள் முதல் வாதத்தை முன்னிறுத்துவதாக அறிய முடிகின்றது. சமண, பௌத்த, வைதிக சமயங்களில் இடம்பெறும் வினை, கர்மா, விதி என்னும் கருத்தாடல்கள் பாவம், புண்ணியம், மறுபிறவி குறித்த நம்பிக்கைகளாகத் தெரிய வருகின்றன. மாறாக ஆசீவக ஊழ் கோட்பாடு இவற்றை மறுத்து வேறுபட்டு எல்லாம் தற்செயல் என்று கூறும் கோட்பாட்டைக் காண முடிகின்றது.

## References

Basham, A.L., (2009) History and Dectrincs of AJIVIKAS, Motilal Banarsidas Publisher, Delhi, India.

Ilampuranar, (2005) Tholkappiyam Porulathikaram- Ilampuranar Urai, First Edition, Saradha pathippagam, Chennai, Tamil Nadu, India.

Kandasamy, (2012) Tamililum thathuvamum, Meiyappan Pathippagam, Chennai, India.

Puliyur Kesikan, (2002) Purananuru, Paari Nilayam, Chennai, India.

Venkatasamy Nattar, N.M., (2018) Silapathikaram Moolamum Uraiyum, 1st Edition, Gowra Agency, Chennai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License